# அலகு - 2 நற்றிணை

நற்றிணை 175 புலவர்களால் பாடப் பெற்ற 400 அகப்பாடல்களைக் கொண்டது. இதனை தொகுத்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன். நற்றிணைப் பாடல்கள் 9 அடி முதல் 12 அடி வரை அமைந்துள்ளன.

நற்றிணையில் உள்ள குறிஞ்சிப் பாடல் மூன்றும் தோழிக் கூற்றாக உள்ளன. முதல் பாடலில் தலைவன் தன் நிலத்தில் குரங்கு, தன் பெண் குரங்குடன் இனிது வாழும் நிகழ்வினைக் கூறி, தலைவனும் உன்னை வரைவு செய்துகொள்ள வந்துள்ளான் என்று செய்தியை தோழியிடம் கூறுகிறாள், இதனை,

"தாது உண் இருக்கையின் தோன்றும் நாடன்
வந்தனன்; வாழி - தோழி!" என்றாள்.

இரண்டாம் பாடலில் தலைவன் வரைவு விரைந்து தலைவியை வரைவு கொள்ள வேண்டும் என்றும், தலைவியின் ஆற்றாமையை விளக்கி கூறுகிறாள்; தலைவி, தலைவனை எண்ணி மெலிந்தும் வருந்தியும் உள்ளாள் என்பதை

"அன்னை காக்கும் தொல் நலம் சிதைய
காண்தொறும் கலுழ்தல் அன்றியும்"

என்று விளக்கி கூறுகிறாள்.

மூன்றாம் பாடலில் தலைவன் நல்லவன், பண்பாளன் அவனின் அன்பை நீ ஏற்றுக் கொள் என்கிறாள். இதனை,

"கழல்தொடி வலித்த என்
பணைஇல் பெற்றி நினைப்பு ஆகின்றே" என்று கூறுகிறாள்

நற்றிணையில் உள்ள முல்லைப் பாடல்கள் மூன்றும் வினை முற்றி மீண்ட தலைவன் தன் தேர்ப்பாகனுக்கு உரியதாக அமைந்துள்ளது.

முல்லை நிலத்து காட்டுக் கோழியின் காட்சி, முன்னர் நிகழ்ந்த தலைவியின் அன்பு நிகழ்வுகள்; தலைவி தனக்காக காத்திருக்கும் நினைவுகள் இவற்றை கூறி தலைவன் தேரை விரைந்து ஓட்டக் கூறுகிறான். இதனை,

"நாள் இரை கவர மாட்டி, தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே" (21)

என்றும்,

"அவிழ் அலர் முறியினை கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்து அயர் நிலையே" (42)

கூறுவதன் மூலம் தலைவனின் எண்ண ஓட்டங்கள் விளங்கும்.

மருதத் திணைப் பாடல்களில் முதல் பாடலில் பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனை, தோழி நீ யார் எனத் தெரியாது நீ பரத்தையிடமே செல்வாயாக என்று வாயில் மறுத்துக் கூறுகிறாள்

இரண்டாவது பாடலில் புதல்வன் பிறந்ததை அறிந்த தலைவன் இல்லம் வந்த நிகழ்வை தோழி கூறுதல்

"நள்ளென் கங்குல், கள்வன் போல
அகன் துறை ஊரனும் வந்தனன்" (40)

இரவில் வந்த தலைவனைப் பற்றி தோழி கூறியது.

மூன்றாம் பாடலில் தலைவன் நல்லவன் பெண்மைக்குரியவன் என தோழி கூறல்

"நறுநுதல் அரிவை! போற்றேன்
சிறுமை பெருமையின் காணாது துணிந்தே."

என்று தலைவனின் பண்பை விளக்கி கூறினாள்.

'நற்றிணையில் நெய்தல் திணைப் பாடல் தலைவன் சிறைப்புறமாக இருந்தால், தலைவியை இல் செறித்தனர். இதனை தோழி நாம் ஏதேனும் குற்றம் செய்தோமோ, ஏதையேனும் மறைத்தோமோ இல்லையே. ஆனால் செவிலித் தாய் நம்மை தலைவன் பொருட்டாக இல் செறிக்கின்றனர் என்கிறாள். இதனை

"நுண்பல
சிறுபாசடைய நெய்தல்
குறுமோ, சென்று" எனக் கூறாதோளே"

என வினவுகிறாள்.

இரண்டாம் பாடலில் தலைவன் உடன் இருக்கையில் இந்துறை இனிமையாக இருந்தது. தலைவன் இல்லாததால் வருத்தமாக உள்ளது என்கிறாள் தலைவி, இதனை,

"இரு வீ தாழல் துறையமான் இனிதே
பெரும் புலம்பு உற்ற நெஞ்சமொடு, பல நினைந்து
யானும் இனையேன்" (31) என்று உரைக்கிறாள்.

மூன்றாம் பாடலில் தோழி, தலைவிடம் தலைவனைப் பிரிவால் தலைவியுடன் இருந்து அவனுக்கு துணையளி செய்வாயாக என்கிறாள். இதனை

"உறையின் போதாது அரிப்பினும், சிறிய
நெகிழ்ந்த கவின் நலம் கொல்வேன்" 35

என்று நீ அருகிலிருந்து அவனை கவனித்தால் அவர் கண்கள் வாட்டம் அடைகின்றன. நீ சிறிதும் விலகாமல் இருப்பாயாக என்று உரைக்கிறாள்.

X ——— X